காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

மாபெரும் பேச்சுப் போட்டி வண்டலூரில் நாளை நடைபெறுகிறது!

மாவட்டச் செயலாளர்-அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக 17-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி மாபெரும் பேச்சுப் போட்டி வண்டலூரில் நாளை (18-ஆம் தேதி) நடைபெறுகிறது என்றும், இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட முழுவதிலும் இருந்து கழக இளைஞர் அணியினர் திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்றும் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு 100 இளம் பேச்சாளர்களை தேர்வு செய்து கழகத் தலைமைக்கு தரும்படி, நம்முடைய உயிரிலும் மேலான அன்புத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞர் அணியினர் அறிவுறுத்தியதற்கு இணங்க,

கழக இளைஞர் அணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர் உத

யநிதி ஸ்டாலின் அவர்கள் "என் உயிரினும் மேலான...!" என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் கழக இளைஞர் அணியின் சார்பில் பேச்சுப் போட்டிகளை நடத்திட வேண்டும் என்று அறிவித்ததற்கிணங்க,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், மாபெரும் பேச்சுப் போட்டி, நாளை (18-ஆம் தேதி) காலை 9.00 மணியளவில் வண்டலூர் கிரசென்ட் பல்கலைக்கழகம் எதிரில் ஜி.எஸ்.டி.சாலையில் அமைந்துள்ள பவானி பேலஸ் திருமண மண்டபத்தில் எனது தலைமையில் (தா.மோ.அன்பரசன்) நடைபெறுகிறது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலக்கண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழகப் பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபுகஜேந்திரன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கழக தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன்,

மாவட்டக் கழக நிர்வாகிகள் த.துரைசாமி, து.மூர்த்தி, வெ.விசுவநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் படப்பை ஆ.மனோகரன், செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இப்பேச்சுப் போட்டியின் நடுவர்களாக கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர் சபாபதி மோகன், திராவிடர் இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், தலைமை தேர்தல் பணிக் குழு செயலாளர் கடலூர் இள.புகழேந்தி, கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் கரூர் முரளி, எழுத்தாளர் எஸ்.கே. பி. கருணா, கழக தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் பத்மபிரியா ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் காட்டாங்கொளத்தூர் ஒன்றிய இளைஞர் அணி செயலாளர் ஏ.வி.எம். இளங்கோவன் நன்றியுரையாற்றுகிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து ஒன்றிய -நகர - பகுதி - பேரூர் - இளைஞர் அணி - மாணவர் அணியின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இந்த பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - பிரபு கஜேந்திரன் - கோல்டு பிரகாஷ் பங்கேற்பு!

தாம்பரம் மேற்குப் பகுதியில் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன் அறிக்கை!

தாம்பரம், ஆக.17-

தாம்பரம் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.இந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்குப் பகுதி கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை தத்துவங்களில் ஏற்கப்பட்டு கழகத்தின் தலைவர் முதலமைச்சர் அவர்களின் படையில் சீறிப்பாயும் சிப்பாய்களாய் தங்களை ஒப்படைத்துக் கொள்ள இருக்கின்ற இளைஞர்களை கழகத்தின் இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் கிழக்கு தாம்பரம் வால்மீகி தெரு ஏரிக்கரை தெரு சந்திப்பில் இன்று (17.8.2024) காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

இம் முகாமினை மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து கருத்துரை வழங்குகிறார். மற்றும் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டீ பிரகாஷ், மாவட்ட கழகத்தால் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள பார்வையாளர் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஆல்பர்ட், பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் டி.காமராஜ், மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வி.கார்த்திக் சிவ சுப்பிரமணியன், பகுதி கழக நிர்வாகிகள் வி.முனுசாமி, பி.ஜோதி குமார், எம்.சி., எம்.சீனிவாச குமார், கி. வேல்மணி, எல். பேகம், டி.ஆர். நரசிம்மன், எம்.கலைவாணன், ஏ.நசீர், அ.லோகேஷ் குமார், வி.ஜி. சிவக்குமார், வட்டக் கழக செயலாளர் சி.செழியன், கே.ரமேஷ் பாபு, வா. லோகநாதன், கே.பிரபாக ரன், டி.வி.முருகன், மாமன்ற உறுப்பினர்கள் ரமணி, ஆதிமூலம், கொடி ஆர்.தாமோதரன், சசிகலா, கார்த்திக், மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள் ஜி. ஆரோக்கியசாமி, கே.ராஜி, எஸ்.ரவிச்சந்திரன், குட்டி (எ) தினேஷ் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்திடுமாறு பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இறுதியாக பகுதி இளைஞரணி ஜி.பிரதீப் நன்றி கூறுகிறார்.

திருத்தணி சுப்பிரமணி சுவாமி திருக்கோவிலில் 78வது ஆண்டு சுதந்திர தின விழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சமத்துவ விருந்தை தொடங்கி வைத்து பொதுமக்கள் மற்றும் பக்தர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார். உடன் கோவில் நிர்வாக அதிகாரிகள், அறங்காவல் குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

இதுவரை ரூ.6 கோடியே 5 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 5 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2,00,000/– (இரண்டு லட்சம்) 16–08–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	ரெ.கதிர்வேல், ஆத்தியடிபட்டி கிராமம், கறம்பக்குடி, புதுக்கோட்டை	–	25,000/–
2.	எம்.கே.நாராயணசாமி, தாசரகுண்டா வீதி, புத்தூர், சித்தூர், ஆந்திர மாநிலம்	–	25,000/–
3.	வி.அகஸ்டின், குழிமுகத்து விளைவீடு, சிதறால் அஞ்சல், கன்னியாகுமரி	–	25,000/–
4.	எஸ்.அந்தோணிமுத்து, வடக்கு தெரு, அச்சம்பாடு, சாத்தான்குளம், தூத்துக்குடி	–	25,000/–
5.	ஆ.இசக்கியம்மாள், சிந்துபூந்துறை, மதுரை ரோடு திருநெல்வேலி	–	25,000/–
6.	முகம்மது இப்ராஹிம், சீதக்காதி தெரு, சம்மந்தபுரம், இராசபாளையம், விருதுநகர்	–	25,000/–
7.	உ.முகம்மது இஸ்மாயில், மேற்கு தெரு, புதுவலசை, இராமநாதபுரம்	–	25,000/–
8.	எம்.தனலட்சுமி, இடைக்கட்டு கிராமம், உடையார்பாளையம், அரியலூர்	–	25,000/–
	மொத்தம்		**ரூ.2,00,000/-**

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி. ஆனந்தன்

ஆகஸ்ட் 17 (2010)

நீதி கட்சித் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமை பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு ஆலோசனைக் கூட்டம்!

அணிச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

சென்னை, ஆக.17

சென்னையில் தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வரும் 26-ஆம் தேதி நடைபெறுகிறது.

இது குறித்து மாநிலச் செயலாளர்டாக்டர்.அ.சுபேர்கான் அறிவிப்பு வருமாறு:-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 26-08-2024 திங்கள்கிழமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முப்பெரும் விழா கொண்டாட்டம் மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாநிலச் செயலாளர் டாக்டர்.அ.சுபேர்கான் அறிவித்துள்ளார்.

ஆவணிப்பூர் குப்புசாமி தந்தை ஏழுமலை மறைவு!

கழக நிர்வாகிகள் அஞ்சலி!

விழுப்புரம், ஆக.17-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் குப்புசாமியின் தந்தையார் ஏழுமலை (வயது 80) அவர்கள் ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம் ஆவணிப்பூர் கிராமத்தில் நேற்று (16.8.2024-வெள்ளிக்கிழமை) 1.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் ஏராளமானோர்கலந்துகொண்டு மறைந்த ஏழுமலை உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம். கமலநாதன்

ஆகஸ்ட் 17 (1997)

தருமபுரி மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

"ஓர் இனிய நண்பனை மட்டுமல்ல; இலட்சிய வீரனையும் இழந்தேன்" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.